## முதல் இடைப்பருவத்தேர்வு – ஜூலை – 2025

## தமிழ்த்துகள் மாதிரி வினாத்தாள் 1

**நேரம் – 1.30 மணி** **பத்தாம் வகுப்பு** **மதிப்பெண் 50**

தமிழ் — இயல் 1, 2

---

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **8x1=8**

1. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் எது?

அ.இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ.என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ.இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ.என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

2. பரிபாடல் அடியில் 'விசும்பில், இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?

அ.வானத்தையும் பாட்டையும் ஆ.வான்வெளியில், பேரொலியில்

இ.வானத்தில், பூமியையும் ஈ.வானத்தையும் பேரொலியையும்

3. 'மகிழுந்து வருமா?' என்பது –

அ.விளித்தொடர் ஆ.எழுவாய்த்தொடர்

இ.வினையெச்சத்தொடர் ஈ.பெயரெச்சத்தொடர்

4. பீடு என்பதன் பொருள் ........

அ. சிறப்பு ஆ.அன்பு இ.அடக்கம் ஈ.ஆசை

5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைந்தது

அ.வேற்றுமை உருபு ஆ.எழுவாய் இ.உவம உருபு ஈ.உரிச்சொல்

6. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது .............

அ.இலையும் சருகும் ஆ.தோகையும் சண்டும் இ.தாளும் ஓலையும் ஈ.சருகும் சண்டும்

7. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ........

அ.எந் + தமிழ் + நா ஆ.எந்த + தமிழ் + நா இ.எம் + தமிழ் + நா ஈ.எந்தம் + தமிழ் + நா

8. தொகாநிலைத்தொடர் .................... வகைப்படும்.

அ.5 ஆ.6 இ.8 ஈ.9

**II.எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **3x2=6**

9. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

10. மென்மையான மேகங்கள் துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.

11. கட்டுரை படித்த – இச்சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபைப் பயன்படுத்தித் தொடரை விரித்து எழுதுக.

12. பலகை என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

**III.எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x2=4**

13. நூல், பை, மலர், வா – இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.

**14.** *பிழைகளைத் திருத்தி எழுதுக.*

"தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே"

**15.** கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

அ.சிறு – சீறு, ஆ. விதி – வீதி

**IV.எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 3x3=9**

**16.** வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடம் சுற்றுச்சூழல் பற்றிய பாடலைப் பாடிக் காட்டினார். இதை மாணவர்கள் கவனமாகக் கேட்டுப் பாடினர். மாணவர்கள் கேட்ட பாடலில் இருந்து ஆசிரியர் சிறுவினாக்களைக் கேட்டார். இப்பாடல் குறித்த உங்கள் கருத்துகளை எழுதி வாருங்கள். நன்றாக எழுதுபவருக்குப் பரிசு உள்ளது என்றும் ஆசிரியர் கூறினார். வண்ணமிட்ட சொற்களுக்கான தொகாநிலைத் தொடர்களைக் கண்டறிக.

**17.** 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'
இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

**18.** உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

**19.** தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

20. கண்ணதாசன் – குறிப்பு வரைக.

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2x5=10**

**21.** அ. காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக. **(அல்லது)**

**ஆ. மொழிபெயர்க்க.**

If you talk to a man in language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. –Nelson Mandela

Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. – Rita Mae Brown.

**22.** அ. மாவட்ட அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழியை வாழ்த்தி மடல் எழுதுக. **(அல்லது)**

**ஆ.** மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**VI. விரிவான விடையளிக்கவும். 1x8=8**

**23.** "பிரும்மம்" கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர் போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.

**(அல்லது)**

ஆ. சான்றோர் வளர்த்த தமிழ் – கட்டுரை எழுதுக.

**VII. அடிபிறழாமல் எழுதுக. 5**

24. "மாற்றம்" எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

முதல் இடைப்பருவத்தேர்வு – ஜூலை – 2025

## தமிழ்த்துகள் மாதிரி வினாத்தாள் 2

**நேரம் – 1.30 மணி** **பத்தாம் வகுப்பு** **மதிப்பெண் 50**

தமிழ் – இயல் 1, 2

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8x1=8**

1. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது'
– தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –
அ.பாடிய, கேட்டவர் ஆ.பாடல், பாடிய இ.கேட்டவர், பாடிய ஈ.பாடல், கேட்டவர்

2. பரிபாடல் அடியில் 'விசும்பில், இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?
அ.வானத்தையும் பாட்டையும் ஆ.வான்வெளியில், பேரொலியில்
இ.வானத்தில், பூமியையும் ஈ.வானத்தையும் பேரொலியையும்

3. 'மகிழுந்து வருமா?' என்பது –
அ.விளித்தொடர் ஆ.எழுவாய்த்தொடர் இ.வினையெச்சத்தொடர் ஈ.பெயரெச்சத்தொடர்

4. மிளகாய்ச்செடியின் அடி ......................
அ. தாள் ஆ. தண்டு இ. கோல் ஈ. தூறு

5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைந்தது
அ.வேற்றுமை உருபு ஆ.எழுவாய் இ.உவம உருபு ஈ.உரிச்சொல்

6. <u>'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்'</u> நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது ............
அ.இலையும் சருகும் ஆ.தோகையும் சண்டும் இ.தாளும் ஓலையும் ஈ.சருகும் சண்டும்

7. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது –
அ.குலைப்பெயர் வகை ஆ.மணிப்பெயர் வகை இ.கிளைப்பெயர் வகை ஈ.இலைப்பெயர் வகை

8. எது வினையாலணையும் பெயர் ?
அ படித்தவர் ஆ பாடுதல் இ படித்தல் ஈ பாடு

**II.எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 3x2=6**

9. "கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது".
பாடல் அடிகளில் உள்ள மோனை, எதுகைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

10. தமிழர்கள் வீசுகின்ற திசையைக் கொண்டு காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்?

11. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

12. பலகை என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

**III.எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2x2=4**

13. நூல், பை, மலர், வா – இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.

**14.** *எண்ணுப்பெயர்களைக் கண்டுபிடித்துத் தமிழ் எண்களில் எழுதுக.*

அ. எறும்புந்தன் கையால் எண் சாண்

ஆ. ஐந்து சால்பு ஊன்றிய தூண்

**15.** கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

அ.கொடு – கோடு, ஆ. கொள் – கோள்

**IV.எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **3x3=9**

**16.** உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப் பற்றிப் பேசினால்... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

**17.** 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' – இவை அனைத்தையும் யாம் அறிவோம்.

இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

**18.** உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

**19.** தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

20. நாகூர்ரூமி – குறிப்பு வரைக.

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **2x5=10**

**21.** அ. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக. **(அல்லது)**

**ஆ. மொழிபெயர்க்க.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colorful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**22.** அ. உங்கள் கிராமத்திற்கு நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் வரைக.

**(அல்லது)**

**ஆ.** மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**VI. விரிவான விடையளிக்கவும்.** **1X8=8**

**23.** அ. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**(அல்லது)**

ஆ. காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

**VII. அடிபிறழாமல் எழுதுக.** **5**

24. "அன்னை மொழியே" எனத் தொடங்கும் மனப்பாடப் பாடல்.